
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044


| Vol: 02 | Issue: 216 | 4 Pages | 4.3.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 216 | 4 பக்கங்கள் | 4.3.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி**
**தின்னுயிர் நீக்கும் வினை**

**விளக்கம்:**
**தன் உயிர் உடம்பிலிருந்து நீங்கிச் செல்வதாக இருந்தாலும், அதைத் தடுப்பதற்காகத் தான் வேறோர் உயிரை நீக்கும் செயலைச் செய்யக்கூடாது.**

# உலக வனவிலங்கு தினம்: குஜராத் கிர் தேசிய பூங்காவில் பிரதமர் மோடி லயன் சஃபாரி





அகமதாபாத், மார்ச். 4

பிரதமர்நரேந்திரமோடி கிர் வனவிலங்கு சரணாலயத்தின் தலைமையகமான சாசனில் நடைபெறும் தேசிய வனவிலங்குகள் வாரிய கூட்டத்திற்கு தலைமை தாங்குவது உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக நேற்று குஜராத் வந்தடைந்தார். தொடர்ந்து ஜாம்நகரில் உள்ள வந்தாரா விலங்குகள் மீட்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையத்தை பிரதமர் மோடி பார்வையிட்டார். வந்தாரா விலங்குகள் மையம் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு 43 இனங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விலங்குகள் உள்ளன.

அதன்பின், நேற்று இரவு பிரதமர் மோடி புகழ்பெற்ற வழிபாட்டுத் தலமான சோம்நாத் கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார். பின்னர் சாசனில் உள்ளமாநிலவனத்துறையால்நிர்வகிக்கப்படும்வனவிருந்தினர்மாளிகையான சின் சதனில் தங்கி ஓய்வு எடுத்தார்.

இந்தநிலையில், வனவிலங்கு தினத்தையொட்டி இன்று காலை சின் சதனில் இருந்து, பிரதமர் மோடி மற்றும் வனத்துறை மூத்த அதிகாரிகளுடன் லயன் சஃபாரி மேற்கொண்டார். அப்போது எந்தவித பாதுகாப்பு கவசம் இன்றி பயணம் செய்தார். லயன் சஃபாரி செய்த பிறகு தேசிய வனவிலங்குகள் வாரிய கூட்டத்தில்பங்கேற்கிறார்.லயன்சஃபாரியின்போதுஎடுத்தபுகைப்படங்களை எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

லயன் சஃபாரி குறித்து பிரதமர் மோடி எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

இன்று காலை, #WorldWildlifeDay உலக வனவிலங்கு தினத்தையொட்டி கம்பீரமான ஆசிய சிங்கங்களின் தாயகமான கிர் வனப்பகுதியில் ஒரு சஃபாரி சென்றேன். கிர் வனப்பகுதிக்கு வருவது, நான் குஜராத் முதல்மந்திரியாக இருந்தபோது நாங்கள் கூட்டாகச் செய்த பணியின் பல நினைவுகளை மீண்டும் கொண்டு வருகிறது. பல ஆண்டுகளாக, கூட்டு முயற்சிகள் ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கைசீராகஉயர்ந்துவருவதைஉறுதிசெய்துள்ளன. ஆசியசிங்கங்களின் வாழ்விடத்தைப் பாதுகாப்பதில் பழங்குடி சமூகங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த பெண்களின் பங்கும் பாராட்டத்தக்கது என பதிவிட்டுள்ளார்.

கிர் தேசிய பூங்காவில் ஆசிய சிங்கங்களைப் பாதுகாப்பதற்காக லயன் திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.2,900 கோடிக்கு மேல் ஒப்புதல் அளித்துள்ளதாக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செபி முன்னாள் தலைவர் மாதபி புச் மீது வழக்குப் பதிவு செய்ய கோர்ட்டு உத்தரவு



மும்பை, மார்ச். 4

1994 ம் ஆண்டு நடந்த பங்குப் பட்டியல் மோசடியில், இந்தியப் பங்குச் சந்தை வாரியத்தின் (SEBI) முன்னாள் தலைவர் மாதபி பூரி புச், அதன் தற்போதைய முழுநேர இயக்குநர்கள் மூன்று பேர் மற்றும் இரண்டு பி.எஸ்.இ அதிகாரிகள் மீது எப்.ஐ.ஆர். பதிவு செய்யுமாறு ஊழல் தடுப்புப் பணியகத்திற்கு (ACB) மும்பை சிறப்பு கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி பங்குச் சந்தை விதிகளை மீறி செயல்பட்டதாக கூறி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையில், தவறு நடந்திருப்பது முதல்கட்ட ஆதாரங்களில் தெளிவாகிறது என்பதால், மாதபி பூரி புச் மற்றும் 5 அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் தடுப்பு அமைப்பு (ACB) எப்.ஐ.ஆர் பதிவு செய்ய வேண்டும் என ஊழல் தடுப்புசிறப்பு கோர்ட்டு உத்தரவிட்டது.

முன்னதாக செபி முன்னாள் தலைவர் மாதபி பூரி புச் மற்றும் செபி உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 5 பேர் மீது பங்குச் சந்தை மோசடி மற்றும் ஒழுங்குமுறைமீறல்கள்தொடர்பாகவிசாரிக்கவேண்டுமெனதானேவைச் சேர்ந்த பத்திரிகையாளர் சபன் ஸ்ரீவஸ்தவா மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான வழக்கு விசாரணை மும்பை ஐகோர்ட்டு நீதிபதி சஷிகாந்த் ஏக்நாத்ராவ் அமர்வு முன்பு நடைபெற்றது. அப்போது நீதிபதி கூறுகையில், "முன்னாள் செபி தலைவர் மாதபி பூரி புச், செபி உயர் அதிகாரிகள், முன்னாள் பி.எஸ்.இ தலைவர் பிரமோத் அகர்வால், பி.எஸ்.இ தலைமை நிர்வாக அதிகாரி சுந்தரராமன் ராமமூர்த்தி ஆகியோர் மீது எப்.ஐ.ஆர் பதிவு செய்யவேண்டும் என்று தனது உத்தரவில் தெரிவித்தார்.

மேலும் இந்த வழக்கில் ஒழுங்கு முறை விதிகள் மீறல், கூட்டு சதி நடந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே இது தொடர்பாக நேர்மையான பாரபட்சமற்ற விசாரணை தேவை. இந்த வழக்கு தொடர்பாக முன்னாள் செபி தலைவர் மாதபி பூரி புச், முன்னாள் மும்பை பங்கு சந்தையின் தலைவர் பிரமோத் அகர்வால், மும்பை பங்கு சந்தையின் தலைமை நிர்வாக இயங்குனர் சுந்தரராமன் ராமமூர்த்தி மற்றும் செபியின் முழு நேர உறுப்பினர்கள் அஸ்வினி பாட்டியா, ஆனந்த் நாராயணன், கம்லேஷ் சந்திர வர்ஷினி ஆகியோர் மீது ஊழல் தடுப்பு பிரிவின் கீழ் எப்.ஐ.ஆர் பதிவு விசாரணை நடந்த செய்யவேண்டும். இந்த விசாரணையை கோர்ட்டு கண்காணிக்கும் என்றும் 30 நாட்களுக்குள் அறிக்கையை தாக்கல் செய்யுமாறும் நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்தார்.

முன்னதாக கடந்த 2023ம் ஆண்டு பங்கு முறைகேடு, பங்கு மதிப்பை அதிகமாக காட்டி அதிக கடன்கள் பெறுவது, போலி நிறுவனங்களை துவங்கி வரி ஏய்ப்பு செய்வது போன்ற குற்றங்களில் அதானி குழுமம் ஈடுபட்டதாகஹிண்டன்பர்க்நிறுவனம்குற்றம்சாட்டியது. இதனையடுத்து செபிஅமைப்புவிசாரணைநடத்தியது. அப்பொழுது செபியின்தலைவராக மாதபி பூரி புச் இருந்தார்.

இதனையடுத்து மீண்டும் ஹிண்டன்பர்க் நிறுவனம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் அதானி குழுமம் முறைகேட்டில் ஈடுபட்ட நிறுவனங்களில் மாதபி பூரி புச் மற்றும் அவரது கணவர் தாவல் புச் ஆகியோர் முதலீடு செய்திருப்பதாக குற்றம் சாட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து கட்சிக்கூட்டத்தில் பங்கேற்க வாருங்கள் மீண்டும் அழைப்பு விடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

நாகை, மார்ச். 4

நாகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

★ தமிழகம் இருமொழிக்கொள்கையை பின்பற்றுவதால் எல்லா புள்ளி விவரங்களிலும் முன்னிலையில் உள்ளது.

★ தமிழ்நாட்டில் வளர்ச்சி, தமிழ் மொழியின் சிறப்பு சிலரது கண்களை உறுத்துகிறது.



★ ஆங்கிலம் கற்றதால் தான் பெரிய நிறுவனங்களில் தமிழர்கள் உள்ளனர். இந்தியை கற்பதால் என்ன பயன்?

★ தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக நாளை மறுநாள் அனைத்து கட்சி கூட்டம் கூட்டப்படுகிறது.

★ சுயநலத்திற்காக தமிழகத்தின் எதிர்காலத்தை அடகு வைக்காமல் அனைத்து கட்சிக்கூட்டத்தில் பங்கேற்க வாருங்கள்.

★ அரசியல் வேறுபாடுகளை களைந்து அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்க வாருங்கள் என்று மீண்டும் அவர் அழைப்பு விடுத்தார்.

# நாளுக்கு நாள் விபத்துக்கள் அதிகரித்து வரும் நிலையில் நடவடிக்கை உடனடி நடவடிக்கை எடுக்குமா தமிழக அரசு?




மாதவரம் பகுதியில் சாரங்கபாணி நகரில் பகுதி திரு சுதர்சனம் அவர்களின் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாரங்கபாணி நகர் நகரில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சாலைகள் பராமரிப்பின்றி இருப்பதால் இருசக்கர வாகன ஓட்டிகள் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முதியோர்கள் என பலரும் சாலைகளில் நடந்து செல்லும் போது விபத்தில் சிக்கி வருவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர் அனைத்து தெருக்களும் ஆங்காங்கே குண்டும் குழியமாக காட்சியளிக்கின்றது மேலும் மழைக்காலத்தில் சாலையோரங்களில் மழைநீர் தேங்கும் சூழ்நிலை உருவாகிறது கடந்த வருடம் மழைக்காலத்திலும் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றுள்ளது இனிவரும் நாட்களில் உயிர்வழி ஏற்பட வாய்ப்புள்ளது நடவடிக்கை மேற்கொள்ளுமா தமிழக அரசு.

# சிவாஜி கணேசன் வீட்டை ஜப்தி செய்ய சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, மார்ச். 4

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரனும், நடிகருமான துஷ்யந்த், அவரது மனைவி அபிராமி ஆகியோர் பங்குதாரர்களாக உள்ள ஈசன் புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் விஷ்ணு விஷால், நிவேதா பெத்துராஜ் ஆகியோரின் நடிப்பில் ஜகஜால கில்லாடி என்கிற படத்தைத் தயாரிப்பதற்குக் கடன் வழங்கக் கோரி தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் என்கிற நிறுவனத்தை அணுகினர்.


பட தயாரிப்புக்காக தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம், 3 கோடியே 74 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தனர். இந்த கடனை ஆண்டுக்கு 30 சதவீத வட்டியுடன் திருப்பிக் கொடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடன் தொகையை திருப்பி தராததை அடுத்து இந்த விவகாரத்தில் தீர்வு காணும் வகையில் சென்னை ஐகோர்ட்டு ஓய்வுபெற்ற நீதிபதி டி.ரவீந்திரன் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார். இந்த விவகாரத்தை விசாரித்த மத்தியஸ்தர் நீதிபதி ரவீந்திரன், கடன் தொகை வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயை வசூலிக்க ஏதுவாக, ஜகஜால கில்லாடி படத்தின் அனைத்து உரிமைகளையும், தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவன நிர்வாக இயக்குனரிடம் ஒப்படைக்கும்படி கடந்த 2024ம் ஆண்டு மே 4ம் தேதி உத்தரவிட்டார்.

உரிமைகளைப்பெற்றுஅவற்றை விற்று கடன் தொகையை ஈடு செய்யவும், மீதத்தொகையை ஈசன் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்திடம் வழங்கவும் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின்படி படத்தின் அனைத்து உரிமைகளையும் வழங்கக் கோரிய போது, படம் முழுமையடையவில்லை எனக் கூறி பட தயாரிப்பு நிறுவனம் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால், மத்தியஸ்தர் தீர்ப்பை அமல்படுத்தும் வகையில், ராம்குமாரின் தந்தையான சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்து, பொது ஏலம் விட உத்தரவிடக் கோரி, தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தது. அந்த மனுவில், தற்போது வரை கடன் தொகை வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 39 லட்சத்து 5 ஆயிரத்து 543 ரூபாய் வசூலிக்க வேண்டியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அப்துல் குத்தூஸ், இதுவரை பதில் மனு தாக்கல் செய்யவில்லை எனக் கூறி, நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்ய உத்தரவிட்டார். மேலும், இந்த உத்தரவு குறித்து சம்பந்தப்பட்ட சார் பதிவாளருக்கு தகவல் தெரிவிக்கவும் உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை நாளை மறுநாளுக்கு தள்ளி வைத்தார்..

# தமிழக மீனவர்கள் கடத்தல்காரர்களா?: அண்ணாமலைக்கு எஸ்டிபிஜ கட்சி கண்டனம்



சென்னை, மார்ச். 4

எஸ்டிபிஜ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

இலங்கை சிறையில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களின் விசைப் படகுகளையும், நாட்டுப் படகுகளையும் மீட்டுத் தரக் கோரியும், இந்தியஇலங்கை மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியும், ராமேஸ்வரம் தங்கச்சிமடத்தில் மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் தொடர் உண்ணாவிரத போராட்டம் 4 நாட்களுக்கும் மேலாக நடைபெற்று வருகின்றது.

ஆனால், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் கோரிக்கைகளை ஒன்றிய அரசு செவிமடுக்காத நிலையில், திருவோடு ஏந்தும் போராட்டம், தீக்குளிப்பு போராட்டம் என அடுத்தடுத்த போராட்ட அறிவிப்புகளை மீனவர்கள் வெளியிட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும், கொலை செய்யப்படுவதும், மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்து வருகிறது. சொந்த நாட்டு குடிமகனின்உயிரைகாப்பாற்ற வேண்டியது அரசின் முக்கிய கடமையாகும். ஆனால், தமிழக மீனவர்கள் விசயத்தில் மத்திய, மாநில அரசுகள் மெத்தனமாக செயல்படுகின்றன என்பதையே நடக்கும் நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

தற்போது இலங்கையில் 80 க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் நீதிமன்றக் காவலில் இருப்பதாகவும், 169 மீன்பிடி விசைப்படகுகளும் சிறைபிடிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்காது வேடிக்கை பார்ப்பதன் மூலம் மீனவர்களை மூன்றாம் தர குடிமக்களாக மத்திய, மாநில அரசுகள் பார்க்கிறதா என்ற சந்தேகம் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுத்து, இந்திய குடிமக்களாகிய தமிழக மீனவர்களையும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் காக்கும் பொருட்டு, உறுதியானநடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மீனவர்களின் இந்தப் போராட்டத்தையும், மீனவர்களின் கோரிக்கைகளையும் திசை திருப்பும் வகையில், மீனவர்கள் கடத்தலில் ஈடுபடுகிறார்கள்அதனால்தான்இலங்கை கடற்படை கைது நடவடிக்கை மேற்கொள்கிறது என மிக அபாண்டமான அவதூறு தெரிவித்துள்ள பாஜக தலைவர் அண்ணாமலையின் பேச்சு கண்டனத்திற்குரியது.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்பாகவும், மீனவர்களின் பாதுகாப்பை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வலியுறுத்தியும் மீனவர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் முன்னெடுக்கும் அனைத்து வகையான ஜனநாயக போராட்டங்களுக்கும் எஸ்டிபிஜ கட்சி முழு ஆதரவளிக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மண்டலங்கள் உயர்வு; எம்.பி., எம்.எல்.ஏ.க்களுடன் விரைவில் ஆலோசனை கூட்டம் சென்னை மாநகராட்சி தகவல்

சென்னை, மார்ச்.4

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"சென்னை மாநகராட்சியின் தற்போதைய மண்டலங்களின் நிர்வாகப் பகுதிகளை சீரமைத்து, மண்டலங்களின்எண்ணிக்கையை 15ல் இருந்து 20 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, மண்டலங்களின் மாற்றங்கள் தொடர்பாக சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள்மற்றும்மண்டலக் குழு தலைவர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் கூட்டம் நகராட்சிநிர்வாகத்துறைஅமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற உள்ளது. கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் ஆகிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முல்லைப்பெரியாறு அணையில் புதிய கண்காணிப்பு குழு 7ந்தேதி ஆய்வு

கூடலூர், மார்ச். 4

கேரள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள முல்லைப்பெரியாறு அணை மூலம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 14707 ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. மேலும் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும் உள்ளது.



அணையில் நடைபெறும் பராமரிப்பு பணிகளை கண்காணிப்பதற்காக உச்சநீதிமன்றத்தின் பரிந்துரையின்படி மத்திய நீர்வள ஆணையர் தலைமை பொறியாளர் ராகேஷ்காஷ்யப் தலைமையில் மத்திய கண்காணிப்பு குழு இருந்தது. ஆண்டுதோறும் அணைப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டு அங்கு நடக்க வேண்டிய பராமரிப்பு பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி வந்தது.

கடந்த ஆண்டு ஜூன் 13ந் தேதி அணையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2022ம் ஆண்டு எர்ணாகுளத்தை சேர்ந்த ஜோசப் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் 12 மாதத்திற்கு ஒரு முறை முல்லைப்பெரியாறு அணையை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என மத்திய நீர்வள கமிஷன் பரிந்துரை செய்தது.

கடந்த அக்டோபர் 1ந் தேதி முதல் முல்லைப்பெரியாறு அணை தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏற்கனவே பராமரிப்பு பணிக்காக அமைக்கப்பட்டிருந்த மத்திய கண்காணிப்பு குழு, துணை கண்காணிப்பு குழு ஆகியவை கலைக்கப்பட்டது. புதிதாக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அனில்ஜெயின் தலைமையில் 7 பேர் கொண்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில் தமிழக அரசு சார்பில் நீர்வளத்துறை கூடுதல் தலைமை செயலர் மணிவாசன், காவிரி தொழில்நுட்ப குழு தலைவர் சுப்பிரமணியன், கேரள அரசு சார்பில் கூடுதல் தலைமை செயலர் விஸ்வாஸ், கேரள நீர்வளத்துறை தலைமை பொறியாளர், 2 தொழில்நுட்ப வல்லுனர்கள் என 7 பேர் உள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட இந்த குழு வருகிற 7ந் தேதி அணைப்பகுதியில் ஆய்வு மேற்கொள்ள உள்ளது. மெயின் அணை, பேபி அணை, ஷட்டர் பகுதிகள், நீர்கசிவு கேலரி உள்ளிட்ட பகுதிகளை ஆய்வு மேற்கொண்டு அன்றைய மாலை குமுளியில் உள்ள பெரியாறு அணை கண்காணிப்பு அலுவலகத்தில் இரு மாநில அதிகாரிகளுடன் ஆலோசனைகூட்டம் நடைபெற உள்ளது.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 115.20 அடியாக உள்ளது. 97 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து தமிழக பகுதிக்கு 400 கன அடி நீர் திறக்கப்படுகிறது. 1763 மி. கன அடி நீர் இருப்பு உள்ளது.

வைகை அணையின் நீர்மட்டம் 61.01 அடியாக உள்ளது. 234 கன அடி நீர் வருகிறது. மதுரை மாநகர குடிநீர் மற்றும் பாசனத்திற்காக 722 கன அடி நீர் திறக்கப்படுகிறது. 3821 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 35.20 அடியாக உள்ளது. வரத்து இல்லாத நிலையில் 45 கன அடி நீர் திறக்கப்படுகிறது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 73.14 அடியாக உள்ளது. வரத்து இல்லாத நிலையில் 3 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

சண்முகாநதி அணை 1.2, மஞ்சளாறு அணை 1 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது.

# மதுரை மாவட்டம் அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன் காக்கும் அரசு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளி தமிழ்நாடு முதலமைச்சர்க்கு நன்றி

மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 118:853 அமைப்பு சாரா தொழிலாளர் பயனாளிகள் ரூ.100.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவும், தமிழ்நாடு அரசு 1982 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இயற்றியது. அதனையடுத்து கட்டுமான தொழிலாளர்கள் அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கிமோட்டார்வாகனங்கள்பழுது பார்க்கும் தொழிலாளர்கள். சமையல் தொழிலாளர்கள். ஓவியர்கள், வீட்டுப் பணியாளர்கள், நீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்கள், பொற்கொல்லர், முடித்திருத்துவோர் கைவினைத் தொழிலாளர்கள், கைத்தறி மற்றும் பட்டு நெய்யும் தொழிலாளர்கள் உடலுழைப்பு தொழிலாளர்கள் பனைமரத் தொழிலாளர்கள், மண்பாண்ட தொழிலாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் தையல் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் பாதையோர வணிகர்கள் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் என தமிழ்நாடு அரசின் மூலம் 18 நலவாரியங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் துறையின் கீழ் இயங்கி வரும் 18 நலவாரியங்களில் உறுப்பினர்களாக பதிவு பெறுவதற்கு வயது வரம்பு 18 வயது முதல் 60க்குள் இருத்தல் வேண்டும். உறுப்பினர்களாக பதிவு செய்வது புதுப்பித்தல், கேட்புமனுக்கள் போன்றவை www.tnuwwb.tn.gov.in என்ற இணைய வழியில் விண்ணப்பிக்க தமிழக அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் 186 121 நபர்கள் பதிவு பெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களாக உள்ளனர்.

அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலனுக்காக தமிழ்நாடு அரசு கல்வி உதவித்தொகை. திருமண உதவித் தொகை வீட்டுவசதித் திட்டம். மாதாந்திர ஓய்வூதியம் இயற்கை மரணம் விபத்து மரணம். பணியிடத்து விபத்து மரணம் உள்ளிட்ட 14 வகையான அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது இத்தகைய நலத்திட்டங்களின் கீழ், மதுரை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் (மே.2021 முதல் பிப்ரவரி 2025 வரை) மொத்தம் 118,853 அமைப்பு சாரா தொழிலாளர் பயனாளிகள் ரூ.100,33,53,127 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர். குறிப்பாக, 83,266 பயனாளிகளுக்கு ரூ 16.91 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகையும், 2004 பயனாளிகளுக்கு ரூ.2001 கோடி மதிப்பீட்டில் திருமண உதவித்தொகையும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 200 பயனாளிகளுக்கு ரூ.388 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள் 18748 பயனாளிகள் மாதாந்திர ஓய்வூதியமாக தலா ரூபாய் $200 பெற்று பயனடைந்து வருகின்றனர். மாதாந்திர ஓய்வூதியமாக மட்டும் இதுவரை ரூ.93.87 கோடி மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.



அந்த வகையில், அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவரும் நல வாரியங்களில் உறுப்பினர்களாக பதிவு செய்வதன் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடைய முடியும் பதிவு செய்வதற்கு www.tnuwwbtgov.in என்ற இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பானகூடுதல்விவரங்களுக்கு மதுரை எல்லீஸ் நகர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலக முதல் தளத்தில் செயல்பட்டு வரும் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

ஆத்திக்குளம் திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்பில் வசிக்கும் திருசரவணன் ஜெயபாரதி தம்பதியினர் தெரிவித்ததாவது.

என் பெயர் சரவணன். எனது கணவர் பெயர் ஜெயபாரதி. எங்களுக்கு குழந்தைகள் உள்ளனர். நான் சலவை தொழில் செய்து வருகிறேன். தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ளேன். தமிழ்நாடு அர அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு செயல்படுத்தி வரும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தேன். அதன் மூலம் எனக்கு ஆத்திக்குளத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு குடியிருப்பின் கீழ் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் எனக்கு புதிய வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிதாக வழங்கப்பட்டு இந்த வீட்டில் போதிய இடவசதியோடு விசாலமாக உள்ளது. நமக்கென்று ஒரு புதிய வீடு என்று நினைக்கும்போது உள்ளூரமிக மகிழ்ச்சியாக உள்ளது தமிழ்நாடு அரசு என்னைப் போன்ற அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசாக உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு
இசரலி தளபதி எம்.ஏ.
செய்திமக்கள் தொடர்பு அலுவலர் மதுரை.
மகயிலைச் செல்வம், பி.இ.
உதவிமக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) மதுரை

# மனைவி பிரசவ அறையில், கணவர் பிண அறையில்: கதறிய உறவினர்கள்

திருச்சி, மார்ச். 4

திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே உள்ள மருதூர் மேல தெருவை சேர்ந்தவர் மூவேந்தன் (வயது 30) பெயிண்டர். இவர்களுக்கு திருமணமாகி 3 வயதில் ஒரு ஆண் குழந்தை உள்ளது. இந்த நிலையில் மீண்டும் சுஜாதா கர்ப்பம் தரித்தார்.

தற்போது நிறைமாத கர்ப்பிணியாக இருந்த அவரை பிரசவத்துக்காக மூவேந்தன் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தார். பின்னர் அவருக்கு உணவு எடுத்து வருவதற்காக இரவு தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பினார்.

சமயபுரம் மருதூர் சாலையில் ராஜகள்ளிக்குடி என்ற பகுதி சாலை வளைவில் திரும்பியபோது தடுமாறி கீழே விழுந்தார். இதில் அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலமாக ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு டாக்டர்கள் பரிசோதித்து விட்டு வரும் வழியிலேயே மூவேந்தன் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து சமயபுரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். மருத்துவ மனையில் பிரசவத்துக்காக மனைவி அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அதே மருத்துவமனையில் பிரேத கிடங்கில் அவரது கணவரின் உயிரிழந்த உடல் வைக்கப்பட்டு இருப்பதும், கணவர் உயிரிழந்த செய்தியை மனைவியுடன் சொல்ல முடியாமல் அவர்களின் உறவினர்கள் தவிப்பதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஏழுகிணறு பகுதியில் தந்தையை கொலை செய்த மகன் கைது

சென்னை, மார்ச். 4

சென்னை ஏழுகிணறு பகுதியில் தந்தையை மகன் கொலை செய்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த ஜெகதீஷ் என்பவர் ஏழுகிணறு பகுதியில் குடும்பத்துடன் தங்கி இருந்து வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில் ஜெகதீஷை அவரது மகன் ரோகித் இரும்பு ராடால் அடித்து கொலை செய்துள்ளார். ரத்த வெள்ளத்தில் தந்தைகிடந்ததைவீடியோ எடுத்து ரோகித் தனது மாமாவுக்கு அனுப்பி உள்ளார்.

இதையடுத்து தந்தையை கொலை செய்த வழக்கில் ரோகித்தை போலீசார் கைது செய்தனர். அவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தனது தாயை தந்தை அடித்துக் கொடுமைப்படுத்தியதால் ஆத்திரம் அடைந்த ரோகித் அவரை கொலை செய்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# நீட் ரகசியத்தை Daddy Son உடனடியாக சொல்ல வேண்டும் எடப்பாடி பழனிசாமி

சென்னை, மார்ச். 4

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நீட் தேர்வு குறித்த அச்சம் காரணமாக இந்துமதி என்ற மாணவி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன்.



அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று தேனியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூட தி.மு.க.வின் நீட் ரகசிய அரசியல் நாடகம் குறித்து நான் பேசியிருந்தேன்.

நாமும் மருத்துவர் ஆகிவிடலாம் என்கிற உயரிய லட்சியத்தோடு அல்லும் பகலும் படித்து வரும் மாணவர்கள் மத்தியில்,

ஆட்சிப்பொறுப்பேற்று 4 ஆண்டுகள் ஆகியும் இன்று வரை அவர்களுக்கு விடியா தி.மு.க. அந்த நீட் ரகசியத்தை சொல்லாமல், ரகசியம் இருப்பதாக பொய்யான நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை குழப்பத்திலேயே வைத்திருக்கும் இந்த ஸ்டாலின் மாடல் அரசு தான் மாணவியின் மரணத்திற்கு முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

அந்த நீட் ரகசியத்தை மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் உடனடியாக சொல்ல வேண்டும், அப்படி இல்லை என்றால், தி.மு.க. பொய்தான் சொன்னது என்ற உண்மையை ஒப்புகொண்டு, இனியாவது அந்த நீட் மரணமும் நிகழாவண்ணம் தடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# 2026 சட்டமன்ற தேர்தல்: அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து தி.மு.க.,வை தோற்கடிக்க வேண்டும் அர்ஜீன் சம்பத்

தாராபுரம், மார்ச். 4

தாராபுரத்தில் இந்து மக்கள் கட்சி மாநில செயற் குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கட்சியின் மாநில தலைவர் அர்ஜூன் சம்பத் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:



2026 தேர்தலுக்குள் இந்து மக்கள் கட்சி தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும்கிளைகள்அமைத்து கட்சியை வலிமைப்படுத்தநடவடிக்கையில் ஈடுபட உள்ளது. வக்பு வாரிய சொத்து என தாராபுரம், அலங்கியம் திருப்பரங்குன்றம் உள்பட பல பகுதிகளில் இந்துக்களின் வக்கு நிலங்களை அபகரிக்க முயற்சி நடக்கிறது.

திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தர்காவை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். வக்பு வாரிய மசோதாவை நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழகத்தில் ஒரே நாளில் ஒன்பது பாலியல் வன்கொடுமைகள் நடைபெறுவது வேதனை அளிக்கிறது.

2026 சட்டமன்ற தேர்தலில் இந்துக்களின் வாக்கு வங்கி ஒன்றிணைக்கப்பட வேண்டும். தேசிய ஜனநாயக முன்னணியில் அ.தி.மு.க., சீமான், பா.ஜ.க. உள்பட அனைத்துக் கட்சிகளும் ஒன்று திரண்டு ஒரு அணியில் நின்று தி.மு.க. அணியினரை தோற்கடிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தவறுதலாக மாற்று தேர்வு மையத்திற்கு வந்த +2 மாணவிகள்.. காரில் அழைத்து சென்று உதவிய கல்வி அலுவலர்

ஈரோடு, மார்ச். 4

தமிழகம் முழுவதும் இன்று பிளஸ்2 பொதுத் தேர்வு தொடங்கி நடந்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் பிளஸ்2 பொதுத் தேர்வை 108 தேர்வு மையங்களில் 23 ஆயிரத்து 71 மாணவ மாணவிகள் எழுதுகின்றனர். தனித்தேர்வர்கள் 1, 267 என மொத்தம் 24,338 மாணவ மாணவிகள் பிளஸ்2 பொதுத்தேர்வு எழுதுகின்றனர்.



இன்று காலை 10:15 மணிக்கு பிளஸ்2 பொதுத்தேர்வு தொடங்கியது. முதல் நாளான இன்று தமிழ் முதல் தாள் தேர்வை மாணவ மாணவிகள் எழுதினர்.

இந்நிலையில் தேர்வை பார்வையிடுவதற்காக ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுப்பாராவ் ஈரோடு பன்னீர்செல்வம் பார்க் அருகே உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்திற்கு வந்திருந்தார்.

அப்போது தனி தேர்வு எழுதும் 3 மாணவிகள் அந்த தேர்வு மையத்துக்கு வந்திருந்தனர். ஆனால் இந்த மாணவிகள் பதற்றத்தில் ஹால் டிக்கெட்டை எடுத்து வர மறந்து விட்டனர்.

மேலும் அவர்கள் தேர்வு மையம் தில்லைநகரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் இருந்ததும் தெரிய வந்தது.

அவர்கள் தவறுதலாக பன்னீர்செல்வம் பார்க்கில் உள்ள அரசு பெண்கள் தேர்வு மையத்திற்கு வந்ததும் தெரிய வந்தது. இதனால் அவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து கொண்டிருந்தனர்.

இதைப்பற்றி கேள்விப்பட்ட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுப்பாராவ் அந்த மாணவிகளிடம் பேசி பதற்றப்பட வேண்டாம். இங்கே உங்களுக்கு ஹால் டிக்கெட் எடுத்து தருகிறேன் என்று கூறி பள்ளி அலுவலகத்தில் உள்ள கணினி மூலம் அந்த 3 மாணவிகளுக்கும் பிளஸ் 2 பொதுத்தேர்வுக்கான ஹால் டிக்கெட்டை டவுன்லோட் செய்து எடுத்து அவர்களிடம் வழங்கினார்.

மேலும் தனது கார் மூலமாக அந்த 3 மாணவிகளையும் தேர்வு மையமான தில்லை நகரில் உள்ள தனியார் பள்ளிக்கு அழைத்துச் சென்று தேர்வு எழுத உதவினார். அந்த 3 மாணவிகளும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுப்பாராவுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# வருகிற 2026 தேர்தலில் மக்கள் ஆதரவோடு ஆட்சி அமைப்போம் சீமான்

செங்கோட்டை, மார்ச். 4

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு கனிமவளங்கள் கொண்டு செல்வதை கண்டித்து நாம் தமிழர் கட்சி சார்பில் தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டு பேசினார். அவர் பேசியதாவது: தமிழ் கூட்டத்தை மீட்டு தன்மானமிக்க தமிழ் பேரினமாக வாழ வைக்க இருக்கிற உங்கள் பிள்ளைகள்தான் நாங்கள். மலை தானே போனால் போகட்டும் என்று நினைத்து விடாதீர்கள். இந்த வளத்தை உங்களால் உருவாக்க முடியாது. நேர்மையான ஆட்சி அமைந்தால் ஊழல், லஞ்சத்தை ஒழித்து விடலாம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வீட்டுக்கு ஒரு கார் தருவோம். எல்லோருக்கும் ஒரு அலைபேசி தருவோம். அதற்கு சார்ஜர் கொடுப்போம் என்று மக்களை ஏமாற்றும் கூட்டம் அல்ல. நாங்கள் மக்கள் பிரச்சனைகளை கேட்க வந்தவர்கள், அவற்றை தீர்க்க வந்தவர்கள்.

உங்களை நம்பித்தான் நிலத்தை காக்க, வளத்தை காக்க, நாம் எல்லோரும் பெரும்படையாக நின்று இந்த மண்ணின் வளத்தை காத்து இன்னொரு தலைமுறைக்கு கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நமக்கு உண்டு. 13 ஆண்டுகளாக நாம் தமிழர் கட்சி மக்கள் பிரச்சனைக்காக போராடி வருகிறது.

ஒரு நேரத்தில் சீமான் என்றால் பொருட்படுத்தாமல் அலட்சியம் செய்து வந்தார்கள். அனைத்து கட்சிகளும் இன்று நாம் வளர்ந்து விட்டதை கண்டு பொறாமைப்படுகின்றனர். குறிப்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சிம்ம சொப்பனமாக இந்த சீமான் இருக்கிறேன். என் பெயரை கேட்டாலே அவருக்கு இரவில் தூக்கம் கூட வருவதில்லை. ஆகவே மக்கள் ஆதரவு எங்களுக்கு படிப்படியாக உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் இருந்து கனிமவளங்களை கேரளாவுக்கு அதிக அளவில் கொடுக்கிறீர்கள். கேரளாவில் இருந்து தமிழகத்திற்குள் மருத்துவ கழிவுகளை கொண்டு வந்து கொட்டுகிறார்கள்.

தமிழகத்தில் இயற்கை வளங்கள் அழிந்து வருகிறது. கேரளாவில் இயற்கை வளங்கள் மாறாமல் பசுமையாக வைத்து இருக்கிறார்கள். பணத்திற்கு ஆசைப்பட்டு இன்று பணத்தை எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். வருகிற 2026 தேர்தலில் மக்கள் ஆதரவோடு நாங்கள் ஆட்சி அமைப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 1200 கனஅடியாக நீடிப்பு



ஒகேனக்கல், மார்ச். 4

கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கலுக்கு நீர்வரத்து கடந்த ஒரு வாரமாக குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று ஒகேனக்கலுக்கு நீர்வரத்து 1200 கனஅடி வந்தது.

இதையடுத்து இன்றும் அதே அளவு தண்ணீர் நீடித்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர்.

பின்னர் அவர்கள் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## ராமேசுவரம் மீனவர்கள் திருவோடு ஏந்தி நூதன போராட்டம்: இன்று தீக்குளிக்க போவதாக அறிவிப்பு



ராமேசுவரம், மார்ச். 4

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல், சிறைபிடிப்பை கண்டித்தும், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், படகுகளையும் உடனடியாக விடுவிக்க கோரி ராமேசுவரம் மீனவர்கள் கடந்த 24ந் தேதி காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் தொடங்கினர்.

போராட்டத்தின் தொடர்ச்சியாக கடந்த வெள்ளிக்கிழமை தங்கச்சிமடம் வலசை பகுதி பஸ் நிறுத்தம் எதிரே ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தனர்.

நேற்று காத்திருப்பு போராட்டத்தை தொடங்கிய மீனவர்கள் இரவு, பகலாக கொட்டும் மழையிலும் பந்தலில் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இந்தநிலையில் தங்கச்சிமடத்தில் நேற்று 3வது நாளாக காத்திருப்பு போராட்டம் தொடர்ந்தது. தமிழக மீனவர்களை கைது செய்வது, இலங்கை சிறையில் உள்ள மீனவர்களுக்கு அபராதம் விதித்தும் அதை கண்டுகொள்ளாத மத்திய அரசை கண்டித்து போராட்டம் தொடரும் என்று மீனவர்கள் உறுதிபட தெரிவித்தனர்.

மேலும் மத்திய மந்திரி நேரில் வந்து மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்த தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்தால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நேற்று கஞ்சி காய்ச்சும் போராட்டம் நடைபெற்றது. இதற்காக போராட்ட பந்தல் முன்பாக கியாஸ் அடுப்பு மற்றும்பாத்திரங்கள்கொண்டுவரப்பட்டு உணவு தயார் செய்யப்பட்டது.

இதற்கிடையே பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக ராமேசுவரம் சென்றிருந்த தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி மீனவர்களை திடீரென்று சந்தித்தார். அப்போது மீனவர்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுவை கவர்னரிடம் வழங்கினார்.

அப்போது அவர்களிடம் பேசிய கவர்ன மத்திய, மாநில அரசுகளிடம் பேசி பிரச்சனைக்கு நிரந்தரதீர்வுகாணநடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துவிட்டு சென்றார்.

காத்திருப்பு போராட்டத்தின் 4வது நாளான இன்று திருவோடு ஏந்தி போராட்டத்தில் பங்கேற்கப் போவதாக மீனவர்கள் அறிவித்து இருந்தனர். அதன்படி போராட்ட பந்தல் முன்பாக திருவோடுகள் கொண்டு வரப்பட்டு வரிசையாக வைக்கப்பட்டன. பின்னர் மீனவர்கள் அதனை கையில் ஏந்தி போராடினர். இதுகுறித்து மீனவர் சங்க தலைவர் ஒருவர் கூறுகை யில், எங்கள் போராட்டத் திற்கு ஆதரவு பெருகி வருகிறது. நேற்று நேரில் வந்த கவர்னரிடம் கோரிக்கை மனுவை அளித்துள்ளோம். அவரும் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து சென்றுள்ளார். இருந்தபோதிலும் மத்திய மந்திரி நேரில் வந்து எங்களிடம் பேசி உறுதி தர வேண்டும்.

இல்லையென்றால் நாளைநாங்கள்தீக்குளிப்பு போராட்டம்நடத்தமுடிவு செய்துள்ளோம். அதனை எங்கே நடத்துவது என்பதை ரகசியமாக வைத்துள்ளோம். இந்த ராமேசுவரம் தீவில் எங்கு வேண்டுமானாலும் எங்கள் தீக்குளிப்பு போராட்டம் நடைபெறலாம் என்றார்.

## காதலனுக்கு டீயில் எலி மருந்து கலந்து கொடுத்த காதலி: குடும்பத்துடன் தலை மறைவு





திருவெண்ணெய்நல்லூர், மார்ச். 4

விழுப்புரம் அருகே திருமணத்துக்கு மறுத்த காதலனுக்கு டீயில் எலி மருந்து கலந்து கொடுத்த என்ஜினீயரிங் மாணவி குடும்பத்துடன் தலை மறைவாகிவிட்டார்.

விழுப்புரம் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 23 வயதுடைய வாலிபர் பிளஸ்2 வரை படித்து விட்டு, தனது வீட்டில் இசேவை மையம் நடத்தி வருகிறார். அதே கிராமத்தை சேர்ந்த 20 வயதுடைய மாணவி தனியார் என்ஜினீயரிங் கல்லூரியில் 2ம் ஆண்டுபடித்து வருகிறார்.

இருவரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதால் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் இந்த பழக்கம் காதலாக மாறியது. இருவரும் உயிருக்கு உயிராக காதலித்து வந்தனர். அடிக்கடி நேரில் சந்தித்தும், செல்போனிலும் பேசி தங்களது காதலை வளர்த்து வந்தனர்.

இந்த நிலையில் இவர்களது காதல் விவகாரம் இரு வீட்டாருக்கும் தெரியவந்தது. காதலுக்கு வாலிபர் வீட்டில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. எனவே கடந்த சில நாட்களாக வாலிபர், தனது காதலியுடன் பேசுவதை தவிர்த்தார். இருப்பினும் அந்த மாணவி, தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினார்.

ஆனால் வாலிபரோ, இனிமேல் பேசவும் மாட்டேன், உன்னை திருமணமும் செய்து கொள்ள மாட்டேன் என்று திட்டவட்டமாக கூறி விட்டார்.

இதனால் என்னசெய்வதென்று தெரியாமல் மாணவி, தனது தோழிகள் மற்றும் உறவினர்களிடம் கூறி புலம்பியுள்ளார். அப்போது, இருவரில் (காதலன்காதலி) யாரேனும் ஒருவர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்வது போல் நடித்தால் பெற்றோர்கள் திருமணம் செய்து வைத்து விடுவார்கள் என்று யோசனை கூறியுள்ளனர்.

அதன்படி காதலனை தனது வீட்டிற்கு மாணவி அழைத்தார். அவரும் அங்கு சென்று பேசிக் கொண்டிருந்தார். அப்போது மாணவி, தனது காதலனுக்கு டீ போட்டுக்கொடுத்தார். அதை குடித்த சில நிமிடங்களில் அவர் மயங்கி விழுந்தார்.

அவரது வாயில் இருந்து நுரை வெளியேறியது. அப்போதுதான் அந்த மாணவி, டீயில் எலி மருந்து (விஷம்) கலந்து கொடுத்ததாக கூறினார்.

உடனே அவரை உறவினர்கள் மீட்டு சிகிச்சைக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சைஅளிக்கப்பட்டது.

பின்னர் மேல் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட வாலிபருக்கு டாக்டர்கள் தீவிரசிகிச்சை அளித்து வருகிறார்கள்.

இதனிடையே காதலனின் செல்போனுக்கு வாட்ஸ் அப் மூலம் மாணவி தகவல் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், முடிந்தால் உன்னை காப்பாற்றிக்கொள் என்று கூறியுள்ளார்.

இது சமூக வலைத்தளங்களில் வைரலாகிறது.

இது குறித்து திருவெண்ணைநல்லூர் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் மாணவி குடும்பத்துடன் தலைமறைவாகி விட்டார். அவர்கள் எங்கு சென்றார்கள் என தெரியவில்லை.

இதனால் யாரிடம் விசாரணை நடத்துவது என போலீசார் குழபத்தில் உள்ளனர்.

## பழனிசாமியை எதிரியாக அல்ல உதிரியாகத்தான் பார்க்கிறோம்: சேகர்பாபு



சென்னை, மார்ச். 4

சென்னையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம், முதல் எதிரி தி.மு.க.தான் என்று எடப்பாடி பழனிசாமி கூறியிருப்பது குறித்து கேள்வி கேட்கப்பட்டது.

அப்போது அவர் கூறியதாவது:

ஏற்கனவே ஒழிந்து கொண்டு இருக்கக்கூடிய கட்சி அந்த கட்சி. முழுமையாக அதை அவர் ஒழித்து விட்டார்.

எதிரிகளே இல்லை நான்தான் எதிரி என்கிறார். நாங்கள் அவரை எதிரியாக பார்க்கவில்லை உதிரியாகத்தான் பார்க்கிறோம்.

அவர் தலைமை ஏற்ற பிறகு தமிழக மக்கள் அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய பரிசு என்னவென்றால் தோல்வி தான்.

எங்கள் கழகத்தலைவர் தலைவராக முன்னின்று தேர்தலை சந்தித்த பிறகு தமிழக மக்கள் அவருக்கு கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய பரிசு வெற்றி.

ஆகவே 2026ம் ஆண்டு 200 அல்ல 200ஐ தாண்டி தி.மு.க. தலைமையில் உள்ள மதசார்பற்ற கூட்டணி வெல்லும். இதை நாளைய வரலாறு சொல்லும் என்று கூறினார்.

## நெல்லை, தென்காசியில் தொடர் மழை: தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு



நெல்லை, மார்ச். 4

நெல்லை, தென்காசி மாவட்டங்களில் கடந்த சிலதினங்களாககனமழை பெய்து வந்தது. நெல்லை, தென்காசி மாவட்டங்களில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகள் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்தது. இந்தத் தொடர் மழை காரணமாக தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகளான கடனாநதி, ராமநதி உள்ளிட்ட ஆறுகளிலும் தண்ணீரின் வரத்து இயல்பை விட அதிகரித்தது. மேலும் சமவெளி பகுதிகளில் உள்ள தண்ணீரும் இணைந்து தற்போது தாமிரபரணி ஆற்றில் இயல்பை விட அதிகரித்துச் செல்கிறது. எனினும் பொதுமக்கள் எவ்வித அச்சமும் இன்றி தாமிரபரணி ஆற்றில் வழக்கம்போல நீராடி வருகின்றனர். டவுன் குறுக்குத்துறை பகுதியில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள முருகன் கோவிலுக்குள் தண்ணீர் புகுந்தது. இதில் கருவறை முதல் பிரகார மண்டபம் வரை தண்ணீர் புகுந்து சுமார் ஒன்றரை அடி உயரத்திற்கு தண்ணீர் தேங்கியது. இதையடுத்து கோவில் ஊழியர்கள் மின்மோட்டார் மூலம் தண்ணீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போக்சோ சிறப்பு கோர்ட்டுகள் மூலம் தமிழகத்தில் 8,898 வழக்குகள் முடித்துவைப்பு

சென்னை, மார்ச். 4

'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமம்' என்பது சட்டத்தின் கோட்பாடு ஆகும். மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு, உரிய நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக ஜனநாயகத்தின் 3வது தூணாக விளங்கும் நீதி தேவதையின் கதவை தட்டுகிறார்கள்.

அந்தவகையில், பாதிக்கப்பட்டவர்கள் தொடுக்கும் வழக்குகளை விசாரித்து, நீதியை நிலைநாட்டும் மகத்தான பணியை கோர்ட்டுகள் செய்துவருகின்றன.

இதற்கிடையே பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் 'போக்சோ' வழக்குகள், பாலியல் குற்றங்கள், நீண்டகாலமாக விசாரணை நடைபெற்று வரும் முக்கிய வழக்குகளை விரைவாக விசாரித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் வகையில் 'போக்சோ' கோர்ட்டுகள்உள்படசிறப்புவிரைவு கோர்ட்டுகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் மாநிலங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

நிலுவையில் உள்ள ஒவ்வொரு 65 முதல் 165 வழக்குகளுக்கும் ஒரு சிறப்பு விரைவு கோர்ட்டு அமைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி,

நாடு முழுவதும் யூனியன் பிரதேசங்கள் உள்பட 30 மாநிலங்கள் சிறப்பு விரைவு கோர்ட்டுகளை அமைத்து உள்ளன. நிலுவையில் உள்ள வழக்குகளின் விகிதம் குறைவாக இருப்பதாக கூறி, அருணாசலபிரதேசம் இந்த திட்டத்தை செயல்படுத்தவில்லை. மேலும் அந்தமான் மற்றும் நிகோபார்தீவுகள்சிறப்புவிரைவு கோர்ட்டுகள் அமைக்க இசைவு தெரிவித்திருந்தாலும், இன்னும் செயல்படுத்தவில்லை.

கடந்த டிசம்பர் மாதம் வரையிலான நிலவரப்படி நாடு முழுவதும் போக்சோ வழக்குகளை மட்டும் விசாரிக்கும் கோர்ட்டுகள் உள்பட 747 சிறப்பு விரைவு கோர்ட்டுகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த கோர்ட்டுகளில் 1 லட்சத்து 91 ஆயிரத்து 633 போக்சோ வழக்குகள் உள்பட 2 லட்சத்து 99 ஆயிரத்து 624 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு உள்ளன. அதிகபட்சமாக போக்சோ வழக்குகள் முடித்து வைக்கப்பட்டதில் 42 ஆயிரத்து 404 வழக்குகளுடன் உத்தரபிரதேசம் முதல் இடத்தில் உள்ளது.

தமிழகத்தில் அமைக்கப்பட்ட 14 சிறப்பு விரைவு கோர்ட்டுகள் போக்சோ வழக்குகளை மட்டும் விசாரித்து வருகின்றன. இந்த கோர்ட்டுகள் மூலமாக 8 ஆயிரத்து 898 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு உள்ளன. புதுச்சேரியில் கடந்த 2023ம் ஆண்டு மே மாதம் முதல் செயல்பட்டு வரும் போக்சோ கோர்ட்டில் 122 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு உள்ளன.

மத்திய அரசு 201920 முதல் 202425 நிதியாண்டு வரை (கடந்த மாதம் 3ந்தேதி வரையிலான நிலவரப்படி) சிறப்பு விரைவு கோர்ட்டுகள் திட்டத்துக்காக மாநிலங்களுக்கு ரூ.1,008 கோடி விடுவித்து உள்ளது. இதில் அதிகபட்சமாக உத்தரபிரதேசத்துக்கு ரூ.281 கோடி, மத்தியபிரதேசத்துக்கு ரூ.105 கோடி, ராஜஸ்தானுக்கு ரூ.84 கோடி கொடுத்துள்ளது. தமிழகத்துக்கு ரூ.25 கோடியே 46 லட்சமும், புதுச்சேரிக்கு ரூ.55 லட்சமும் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் மோடி கச்சத்தீவை மீட்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார் ? செல்வப்பெருந்தகை



சென்னை, மார்ச்.4

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கு இலங்கை ரூபாயில் 60 லட்சம் அபராதம் விதிப்பதும், மீனவர்களை சிறையில் அடைப்பதும் பா.ஜ.க. ஆட்சியில் தொடர்கதையாக நடந்து வருகிறது. இப்பிரச்சினையில் தலையும் தெரியாமல், வாலும் தெரியாமல் அபத்தமான கருத்துகளை கூறி கச்சத்தீவோடுமுடிச்சுபோட்டு தமிழக கவர்னர் ஆர்.என். ரவி டிவிட்டர் பக்கத்தில் கருத்து கூறியிருக்கிறார். ராமேஸ்வரம் சென்ற கவர்னர் ஆர்.என். ரவி, மீனவர்களை சந்தித்து நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

இதே ராமநாதபுரத்தில் கடல் தாமரை மாநாடு நடத்திய போது, பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும், மீனவர்கள் கைதும், படகுகள் பறிமுதலும் இருக்காது என்று அன்றைய எதிர்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் 2014 தேர்தலுக்கு முன்பு வாக்குறுதி கொடுத்தார். அதை நிறைவேற்றுவதற்கு கடந்த 10 ஆண்டுகளில் மோடி அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை கவர்னர் ஆர்.என். ரவி விளக்குவாரா ?

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தவுடனே அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றத்தில் தலைமை வழக்கறிஞர் முகுல் ரொக்டகி 26 ஆகஸ்ட் 2014 தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் கச்சத்தீவை மீட்பது என்பது நடைமுறையில் சாத்தியமே இல்லாத ஒன்று என்று கூறியதை கவர்னர் ஆர்.என். ரவி மறுக்க முடியுமா ?

கச்சத்தீவை மீட்பதற்காக இலங்கைக்கு எதிராக போரையா தொடுக்க முடியும் ? என்று கேட்டதை எவராலும் மறுத்திட இயலாது. அதேபோல, தந்தி தொலைக்காட்சியில்ரணில் விக்கிரமசிங்கே அளித்த பேட்டியில் கச்சத்தீவு குறித்து இதுவரை இந்திய அரசு எங்களிடம் பேசியதே இல்லை என்று கூறியதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சமீபத்தில் இலங்கை அதிபராக தேர்வு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்க தலைநகர் தில்லியில் பிரதமர் மோடியை சந்தித்த போது இலங்கை அரசுக்கு 4 பில்லியன் டாலர் நிதியுதவி வழங்கியதையும், இலங்கை அரசின் கடனை சீரமைக்க இந்தியா மேலும் ஆதரவளிக்கும் என்றும் பிரதமர்மோடி உறுதி கூறினார். இலங்கைக்கு நிதியுதவி செய்கிற பிரதமர் மோடி, கச்சத்தீவை திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தாரா ? ஏன்வைக்கவில்லை ? 2024 தேர்தல் பிரச்சாரத்தில் கச்சத்தீவை பற்றி பிரதமர் மோடி பேசியதற்கு பிறகு இதுவரை அதனை மீட்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார் ? இதன்மூலம் பா.ஜ.க.வின் இரட்டை வேடம் மட்டுமல்ல, பிரதமர் மோடியின் இரட்டை வேடமும் அம்பலமாகியுள்ளது.

எனவே, தமிழக மீனவர் பிரச்சினையைதீர்க்கவேண்டுமென்று தமிழ்நாடு கவர்நருக்கோ, மத்திய பா.ஜ.க. அரசுக்கோ அக்கறை இருக்குமேயானால் அதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும். அதுகுறித்து நடவடிக்கை எடுக்க கையாலாகவில்லை எனில் கச்சத்தீவை பற்றி கவர்னர் ஆர்.என். ரவியும், பா.ஜ.க.வினரும் பொதுவெளியில் பிதற்றாமல் இருப்பது நல்லது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## கூடுவாஞ்சேரி ஜிஎஸ்டி சாலையில் சேதமடைந்த நிழற்குடை: பொதுமக்கள் அச்சம்



கூடுவாஞ்சேரி, மார்ச். 4

கூடுவாஞ்சேரி ஜிஎஸ்டி சாலையில் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படும் பேருந்து நிழற்குடையை அகற்றி புதிய பேருந்து நிழற்குடை அமைக்க வேண்டும் என மாவட்ட கலெக்டரை பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். திருச்சிசென்னை தேசிய நெடுஞ்சாலையான கூடுவாஞ்சேரி ஜிஎஸ்டி சாலை ஓரத்தில் உள்ள மின் வாரியம் அலுவலகம் அருகே, கடந்த 2013ம் ஆண்டு செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ₹3 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் பேருந்து நிழற்குடை அமைக்கப்பட்டது. அப்போது செங்கல்பட்டு எம்எல்ஏவாக தேமுதிக கட்சியை சேர்ந்த அனகை முருகேசன் பதிவி வகித்து வந்தார். தற்போது, இந்த பேருந்து நிழற்குடையில் பயணிகளின் இருக்கை தரை மற்றும் ஜன்னல்கள் வெடிப்புகள் விட்டு ஆங்காங்கே இடிந்து விழுந்து அந்தரங்கத்தில் தொங்குகிறது.

பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் மழை மற்றும் வெயில் காலங்களில் ஆபத்தை உணராமல் பேருந்து நிழற்குடையின் உள்ளே காத்திருக்கின்றனர். மேலும், பேருந்து நிழற்குடையில் சில மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் எந்நேரமும் படுத்து தூங்குகின்றனர். ஜிஎஸ்டி சாலை ஓரத்தில் கட்டமைப்பு செய்யப்படாமல் கால்வாயில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிழற்குடை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இடிந்து விழும் என்பதால், ஏதாவது ஆபத்து நேர்ந்து விடுமோ என்று அப்பகுதிமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகளிடம் பலமுறை புகார் கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இதுகுறித்து செங்கல்பட்டு கலெக்டர் நேரில் வந்து ஆய்வு செய்து இடிந்து விழும் அபாய நிலையில் உள்ள பேருந்து நிழற்குடையை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# சென்னை சிக்னல்களில் பசுமை பந்தல் அமைப்பு

சென்னை, மார்ச். 4

வெப்பத்தை தணிக்க சென்னையில் சிக்னல்களில் ஓரிரு நாட்களில் பசுமை பந்தல் அமைக்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது.



வாகன ஓட்டிகளுக்கு நிழல் தர வேண்டும் என்பதற்காக, சென்னை மாநகரசாலைகளில் உள்ள சிக்னல்களில் பசுமை பந்தல் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக அண்ணாநகர், அடையாறு, வேப்பேரி, ராயப்பேட்டை உள்ளிட்ட 10 இடங்களில் பசுமை பந்தல் அமைப்பட உள்ளது.

# டிஜிட்டல் கைது: சென்னை பெண்ணிடம் பணம் பறித்த 2 பேர் கைது

சென்னை மார்ச்.4

டிஜிட்டல் கைது என்பது ஒரு புதிய சைபர் மோசடி, இதில் சைபர் குற்றவாளிகள் சிபிஐ அல்லது சுங்கத்துறை அதிகாரிகள் போல நடித்து உங்கள் பெயரில் வந்த பார்சல் ஒன்று எங்களிடம் சிக்கியுள்ளது. அதில், தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் இருந்தது. இதனால் உங்களை கைது செய்யப் போகிறோம். இவ்வாறு வீடியோ அழைப்புகள் மூலம் டிஜிட்டல் கைது செய்வதாக கூறி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மோசடியில் பலரும் சிக்கி தங்களது பணத்தை இழந்துள்ளனர்.

அதேபோல ஒரு டிஜிட்டல் கைது சம்பவத்தில் ஈடுபட்ட 2 பேரை போலீசார் கைது செய்தனர். இவர்கள் டிஜிட்டல் கைது மூலம் கடந்த மாதம் 3ம் தேதி சென்னை திருவல்லிக்கேணியை சேர்ந்த ஒரு பெண்ணிடம் சுமார் ரூ. 1 லட்சத்தை மோசடி செய்துள்ளனர். இதில் பாதிக்கப்பட்ட பெண் போலீசில் புகார் அளித்துள்ளார். இதன் அடிப்படையில் இணைய வழி குற்றவாளிகளை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில் கும்பகோணத்தை சேர்ந்த வெங்கடேஷ், மேடவாக்கத்தை சேர்ந்த முகமது யூனுஸ் என்கிற 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளியையும் போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# ஆதாரத்துடன் விண்ணப்பித்தால் பரிசீலிக்கலாம்: அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை, மார்ச். 4

அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்க, பதிவு செய்த அரசியல் கட்சி என ஆதாரத்துடன் விண்ணப்பித்தால் பரிசீலிக்கலாம் என தேசிய மக்கள் சக்தி கட்சி தொடர்ந்த வழக்கில் தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்க முடியும் என்றும், மனுதாரர் கட்சி பொதுத்துறை செயலாளரிடம் விண்ணப்பித்தால் பரிசீலிக்கப்படும் என்றும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கட்சியின் பதிவு தொடர்பான ஆதாரத்துடன் பொது துறையிடம் இன்றே விண்ணப்பிக்க மனுதாரர் கட்சிக்கு ஐகோர்ட் ஆணையிட்டுள்ளது.

# சாத்தாங்காடு ஏரியில் பறவைகள் சரணாலய திட்டத்தை விரைந்து தொடங்க வேண்டும்: சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

திருவொற்றியூர், மார்ச்.4

சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம், எம்ஜிஆர்நகர் அருகே மாநகராட்சிக்கு சொந்தமான சாத்தாங்காடு ஏரி உள்ளது. 65 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி நிரம்பியிருக்கும். இதனால் சுற்றுப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் இருக்கும். மேலும் ஆண்டு முழுவதும் இந்த ஏரியில் நீர் வற்றாமல் இருப்பதால் மே, ஜூன் மாதங்களில் பல வகையான வெளிநாட்டு பறவைகள் ஏரிக்கு வரும். இப்படி முக்கியத்துவம் வாய்ந்த ஏரியை தூர்வாரி சீரமைத்து பாதுகாக்க வேண்டும் என சமூக நல ஆர்வலர்கள் கோரிக்கை வைத்தனர். இதை தொடர்ந்து, கடந்த ஆண்டு ஏரியின் கரையில் இருந்த முட்செடி, கொடிகள் அகற்றப்பட்டு கரை அமைக்கப்பட்டன.

இந்நிலையில் சாத்தாங்காடு ஏரியை சீரமைத்து பறவைகள் சரணாலயம் அமைக்க வேண்டும் என்று கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னை மாநகராட்சி திட்டமிட்டு திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் நடந்த மண்டல கூட்டத்தில் இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து ரூ.33 லட்சம் செலவில் இப்பபணியை மேற்கொள்ள ஆவண நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு திட்டமிடப்பட்டன. ஆனால் பல்வேறு காரணங்களால் ஏரியை சீரமைக்கவும், சரணாலயம் அமைக்கும் திட்டமும் பல மாதங்களாகியும் தொடங்கப்படாமல் உள்ளது. எனவே திட்டமிட்டபடி பறவைகள் சரணாலய திட்டத்தை செயல்படுத்த கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், திருவொற்றியூர் மண்டல கட்டுப்பாட்டில் உள்ள சாத்தாங்காடு ஏரி 500 ஆண்டுகள் பழமையானது.

சுமார் 65 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி ஒரு காலத்தில் பொதுமக்களுக்கும் கால்நடைகளுக்கும் நீர் ஆதாரமாக பயன்பட்டு வந்தது. கடந்த சில ஆண்டுகளில் ஏரி நிலத்தை தனியார் நிறுவனங்கள் ஆக்கிரமித்து போலி ஆவணங்கள் மூலம் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதனால் தற்போது ஏரியின் அளவு வெகுவாக குறைந்து விட்டது. மேலும் மழை சேமிக்கும் பகுதியாக இருந்த ஏரி தற்போது சரியான பராமரிப்பு இல்லாததால் சேறும் சகதியமாய் தூர்ந்து உள்ளது. எனவே ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டத்தை சென்னை மாநக ராட்சி விரைவாக செயல்படுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தனர்.

# தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1,000 டீசல் பேருந்துகளை, CNG பேருந்துகளாக மாற்ற அரசுப் போக்குவரத்து துறை முடிவு

சென்னை, மார்ச். 4



தமிழகம் முழுவதும் முதற்கட்டமாக 1000 டீசல் பஸ்களை சிஎன்ஜி பேருந்துகளாக மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து துறை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக போக்குவரத்து துறையை பொறுத்தவரை சென்னை, விழுப்புரம், கும்பகோணம், சேலம், கோவை உள்ளிட்ட 8 போக்குவரத்து கழகங்களில் 26 மண்டலங்கள் மூலம் 317 பணிமனைகளில் இருந்து 10,129 வழித்தடங்களில் 20,232 பேருந்துகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இயக்கப்படுகிறது. இதில் 3.5 லட்சம் பேர் சென்னையில் மட்டும் மாநகர பஸ்களில் பயணம் செய்கின்றனர். தமிழகம் முழுவதும் தினமும் 1.32 கோடி பேர் பயணம் செய்கின்றனர். லாப நோக்கம் இல்லாமல், கிராமங்களில் மக்கள் சேவைக்காக மட்டுமே இந்த பஸ்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்தில் இயங்குவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த பேருந்துகளுக்கான டீசல் செலவினம் என்பது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதேநேரத்தில், காற்று மாசு ஏற்படவும் காரணமாக அமைந்துள்ளன. ஏற்கனவே, டீசல் பயன்பாட்டிற்கு பதிலாக அரசு பேருந்துகளை மின்சார பேருந்துகளாகவோ அல்லது

இயற்கை எரிவாயு பயன்படுத்தி இயக்கும் பேருந்துகளாகவோ மாற்ற போக்குவரத்து துறை சார்பில் பல்வேறு ஆலோசனைகள் செய்யப்பட்டு அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வந்தன. குறிப்பாக, டீசலுக்கு பதிலாக சிஎன்ஜி (காஸ்) பயன்படுத்தி இயக்கினால் மைலேஜ் கூடுதலாக கிடைக்க வாய்ப்புகள் உள்ளதாக நடத்தப்பட்ட ஆய்வின் படி வெளியூர்களுக்கு இயக்கப்படும் பேருந்துகளை இயற்கை எரிவாயுவிற்கு மாற்ற போக்குவரத்து கழகங்கள் மூலம் முடிவு செய்யப்பட்டன. அந்தவகையில் முதற்கட்டமாக 1000 டீசல் பேருந்துகளை சிஎன்ஜி பேருந்து முறைக்கு மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து துறை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சிஎன்ஜி (காஸ்) மாற்றப்பட உள்ள பேருந்துகள் அதிகபட்சமாக 8 லட்சம் கிலோ மீட்டருக்கும் குறைவாக இயக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், ஆறு முதல் ஏழு ஆண்டுகளுக்குள் வாங்கப்பட்ட பேருந்துகளாக இருக்க வேண்டும் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளன. இதற்காக தமிழக அரசு சார்பில் ரூ.70 கோடி நிதி ஒதுக்கி அனுமதியை வழங்கி உள்ளது.

இதுகுறித்து போக்குவரத்து துறை அதிகாரி கூறியதாவது: தமிழகத்தில் டீசலுக்கு மாற்றாக அரசு பேருந்துகளை இயக்க பல்வேறு ஆலோசனைகளை செய்துவந்தோம். அதன்படி, மைலேஜ் அதிகரிக்கவும், காற்று மாசடைவதை தடுக்கவும் இயற்கை எரிவாயு மூலம் பேருந்துகளை இயக்க திட்டங்களை வகுத்திருந்தோம். அந்தவகையில், சிஎன்ஜி என்ற இயற்கை எரிவாயு மூலம் இயக்கப்படுவதால் இந்த பேருந்துகள் சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்தாது. மேலும் டீசல் பேருந்துகளை ஒப்பிடும்போது சிஎன்ஜி பேருந்துகள் இயக்கத்தின் மூலம் செலவு குறைந்து வருவாய் அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது. தற்போது முதற்கட்டமாக டீசலில் இருந்து சி.என்.ஜி (காஸ்) மாற்றப்பட்ட உள்ள 1000 பேருந்துகளை கண்டறியும் பணிகள் மேற்கொண்டு வருகிறோம். காஸ் பேருந்துகளை இயக்குவதன் மூலம் மாசு குறையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# "விடாமுயற்சி" படத்தின் "தனியே" வீடியோ பாடல் வெளியானது!




அஜித் குமார் நடிப்பில் மகிழ் திருமேனி இயக்கத்தில் உருவான 'விடாமுயற்சி' திரைப்படம் மிகப்பெரிய எதிர்பார்ப்பிற்கு மத்தியில் கடந்த 6ந் தேதி திரையரங்குகளில் வெளியானது. லைகா தயாரிப்பில் அனிருத் இசையில் உருவாகியிருக்கும் விடாமுயற்சி திரைப்படத்தில் திரிஷா, அர்ஜுன், ஆரவ் ஆகியோர் நடித்துள்ளனர். மகிழ் திருமேனி இயக்கிய இப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுவருகிறது. இப்படத்தை பிரபலங்கள் பலரும் பாராட்டி வருகின்றனர். இந்த படத்தில் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் தன்னுடைய நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார் நடிகர் அஜித். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான விடாமுயற்சி படம் முதல் நாளில் மட்டும் ரூ.34 கோடி வசூல் செய்துள்ளது. விமர்சனம் ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வரும் இப்படம் உலக அளவில் ரூ.150 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது

இப்படத்தின் முதல் பாடலான 'சவதீகா' வெளியாகி வைரலாகின. சவதீகா பாடல் யூடியூப் தளத்தில் தற்போது வரை 2 கோடி பார்வைகளை கடந்துள்ளது. இப்பாடலை அனிருத் மற்றும் அந்தோணிதாசன் இணைந்து பாடியுள்ளனர்.

இந்நிலையில் 'விடாமுயற்சி' திரைப்படத்தின் 'தனியே' வீடியோ பாடல் வெளியாகியுள்ளது.

அஜித்குமார்நடித்துள்ள'விடாமுயற்சி'படம்நெட்பிளிக்ஸ்ஓ.டி.டிதளத்தில்இன்றுவெளியாகியுள்ளதுகுறிப்பிடத்தக்கது.

# ரோகித் சர்மா குறித்து சர்ச்சை கருத்து தெரிவித்த காங்கிரஸ் நிர்வாகி.. ரசிகர்கள் எதிர்ப்பு



8 அணிகள் இடையிலான 9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடர் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றிருந்த அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் மோதின. லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடித்த அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெற்றன. இதன் லீக் சுற்று ஆட்டங்கள் நேற்றுடன் நிறைவடைந்தன.

லீக் சுற்று முடிவில் ஏ பிரிவில் இருந்து இந்தியா , நியூசிலாந்து அணிகளும், பி பிரிவில் இருந்து தென் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவும் அரைஇறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இதில் நாளை நடைபெற உள்ள முதல் அரைஇறுதி ஆட்டத்தில் இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் துபாயில் மோதுகின்றன.

முன்னதாக நேற்று நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் இந்தியா 44 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் ரோகித் சர்மா 15 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். இதனால் அவரை விமர்சிக்கும் விதமாக காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் ஷாமா முகமது தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட கருத்து பெரும் சர்ச்சையை கிளப்பியது.

ஷாமா முகமது தனது எக்ஸ் பக்கத்தில், "விளையாட்டு வீரராக பார்த்தால் ரோகித் சர்மா அதிக உடல் எடை கொண்டவராக இருக்கிறார். அவர் தனது எடையை குறைக்க வேண்டும். நிச்சயமாக, இந்தியா இதுவரை கண்டதிலேயே மிகவும் ஈர்க்கப்படாத கேப்டன் அவர்" என்று பதிவிட்டிருந்தார்.

அவரது இந்த பதிவு சமூக வலைதளங்களில் வைரலானது. இதனை கண்ட இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து ஷாமா முகமது தனது பதிவை உடனடியாக நீக்கினார். இருப்பினும் தற்போது வரை ரசிகர்கள் ஷாமா முகமதை விமர்சனம் செய்து வருகின்றனர்.

# சூர்யா 45 படப்பிடிப்பு புகைப்படத்தை பகிர்ந்த ஆர்ஜே பாலாஜி



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. தற்போது ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் தனது 45வது படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 45' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தினை டிரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளார். இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் திரிஷா நடிக்க உள்ளார். 20 வருடங்கள் இடைவெளிக்கு பிறகு சூர்யாதிரிஷா இணைந்து நடிக்கும் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகி உள்ளது. இப்படத்தில் சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் நடித்து வருகின்றனர். இந்த படத்தின் படப்பிடிப்புகள் கடந்த மாதம் கோயம்புத்தூரில் பூஜையுடன் தொடங்கப்பட்டது.

முதற்கட்ட படப்பிடிப்பு பணிகள் கோவையில் விறுவிறுப்பாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. அதனை தொடர்ந்து இரண்டாம் கட்ட படப்பிடிப்பு பணிகள் சென்னையில் துவங்கியது. ஆனால், சென்னை வண்டலூரிலுள்ள வெளிச்சம் கிராமத்தில் முறையான அனுமதி பெறாமல் பொதுமக்களுக்குஇடையூறுஅளிக்கும்விதமாகபடப்பிடிப்புகிரேன்கள்மற்றும்வாகனங்கள்சாலையில்நிரம்பியிருந்ததால் அப்பகுதி மக்களுக்கும் படக்குழுவினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.இதனால், காவல்துறையினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதால் தற்காலிகமாக 'சூர்யா 45' படப்பிடிப்பு நிறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியானது.

இந்த நிலையில், ஐதராபாத்திலுள்ள ராமோஜி பிலிம் சிட்டியில் 'சூர்யா 45' படப்பிடிப்பு துவங்கியுள்ளதை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆர்.ஜே பாலாஜி பகிர்ந்துள்ளார்.

# கடினமான காலத்தில் நமக்கு யாரும் உதவ முன்வர மாட்டார்கள் ஸ்ரேயாஸ் ஐயர்



சாம்பியன்ஸ் டிராபி தொடரில் நேற்று நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்து அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 50 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 249 ரன்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் ஐயர் 79 ரன்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 5 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து 250 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய நியூசிலாந்து அணியினர், இந்தியாவின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். இதன் காரணமாக நியூசிலாந்து 45.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 205 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் காரணமாக இந்தியா 44 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், தற்போது மிகச் சிறப்பான பார்மில் இருக்கும் ஸ்ரேயாஸ் ஐயர் தன்னுடைய கடினமான காலகட்டம் குறித்தும், நேற்றைய ஆட்டத்தில் அக்சர் பட்டேலுடன் அமைத்த பார்ட்னர்ஷிப் குறித்தும் பேசியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, நான் எந்த ஒரு நபரையும் சார்ந்து இருப்பதை காட்டிலும் தனியாக பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு செயல்பட கற்றுக் கொண்டேன். ஏனெனில், கடினமான காலத்தில் நமக்கு யாரும் உதவவும் முன்வர மாட்டார்கள். அந்த நேரத்தில் நமக்கு நாமே நம்பிக்கையை கொடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எனக்கு நடந்த விசயங்கள் என்னை டெக்னிக்கலாக நிறைய வேலை செய்ய வைத்துள்ளது. நேற்று நான் பேட்டிங் செய்ய வந்தபோது கூட மைதானம் மிகவும் மெதுவாக இருந்தது. அதன் காரணமாகவே நான் மிகவும் பொறுமையாக விளையாடினேன். ரன் எடுக்க மிகவும் சிரமமாக இருந்ததாலேயே தேவையான பந்துகளை அடித்தும் மற்ற பந்துகளுக்கு மரியாதை கொடுத்தும் மெதுவாக செயல்பட்டேன். அக்சர் பட்டேலும் மிகச் சிறப்பாக எனக்கு ஒத்துழைப்பு தந்தார். முதலில் பொறுமையாக ஆரம்பித்து பின்னர் பவுண்டரிகள் வரவர ஆட்டம் எங்கள் பக்கம் வந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

# பெங்களூரு சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட உள்ள தமிழ் படங்கள்



கர்நாடக அரசின் செய்தி மற்றும் தகவல் தொடர்பு துறை சார்பில் 16வது பெங்களூரு சர்வதேச திரைப்பட விழா தொடங்கியுள்ளது. 'வேற்றுமையில் உலகளாவிய அமைதி' எனும் கருப்பொருளில் திரைப்பட விழா நடக்கிறது. தொடக்க விழாவில் துணை முதல்வர் டி.கே.சிவகுமார், நடிகர்கள் சிவராஜ் குமார், கிஷோர், நடிகை பிரியங்கா மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கடந்த 1ந் தேதி தொடங்கிய இந்த விழா வருகிற 8ந் தேதி வரை நடைபெற உள்ளது.

பெங்களூரு ஓரியன் வணிக வளாகத்தில் நடைபெறும் இந்த திரைப்பட விழாவில், சுமார் 60க்கு மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன. கன்னட திரைப்படம், இந்தியா, ஆசியா, உலகம் என 4 பிரிவுகளில் படங்கள் திரையிடப்படுகின்றன.

அந்த வகையில் இந்திய திரைப்படப் பிரிவில் இருந்து, தமிழ் படங்களான 'வாழை, அமரன், மெய்யழகன்' ஆகிய திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரைஇறுதி: இந்தியாவின் பிளேயிங் லெவனை தேர்வு செய்த முன்னாள் வீரர்

8 அணிகள் இடையிலான 9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடர் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றிருந்த அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் மோதின. லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடித்த அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெற்றன. இதன் லீக் சுற்று ஆட்டங்கள் நேற்றுடன் நிறைவடைந்தன. லீக் சுற்று முடிவில் ஏ பிரிவில் இருந்து இந்தியா , நியூசிலாந்து அணிகளும், பி பிரிவில் இருந்து தென் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவும் அரைஇறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இதில் நாளை நடைபெற உள்ள முதல் அரைஇறுதி ஆட்டத்தில் இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் துபாயில் மோதுகின்றன. இந்நிலையில் இந்த போட்டிக்கான இந்தியாவின் பிளேயிங் லெவனை இந்திய முன்னாள் வீரரான ரவி சாஸ்திரி தேர்வு செய்துள்ளார். அதன்படி தற்போதைய சூழலில் நியூசிலாந்துக்கு எதிராக விளையாடிய இந்திய அணியில் இடம்பெற்றிருந்த வீரர்கள் அப்படியே மாற்றமின்றி அணியில் தொடர வேண்டும் என்று கூறியுள்ளார். ரவி சாஸ்திரி தேர்வு செய்த பிளேயிங் லெவன் விவரம் பின்வருமாறு: ரோகித் சர்மா (கேப்டன்), சுப்மன் கில், விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், அக்சர் படேல், கே.எல்.ராகுல், ஜடேஜா, ஹர்திக் பாண்ட்யா, குல்தீப் யாதவ், முகமது ஷமி மற்றும் வருண் சக்ரவர்த்தி

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.